முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணப்ப நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

30.11.2021, செவ்வாய்கிழமை

1. தவசக்தியே ஆறுமுக அரங்கா
தனித்துவமிக்க ஞான தேசிகா
அவதாரம் புரிந்த வள்ளலே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே பிலவ தேளின் திங்கள்
குறைவிலா முன்னான்கீர்திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள், 30.11.2021, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகனுக்கு கண்ணப்ப நாயனார்யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
**உயிர்பலி செய்து கலியுகத்தில்**
**ஞானமிலா நடக்கும் மக்களுக்கு**
**நாட்டிடுவேன் எச்சரிக்கை தானும்**
4. **தானுரைக்க பிணி சோடையென**
**தகாத ஆயுதகண்டம் அல்லல்**
**வானத்திலிருந்து இடி தாக்கம்**
**வாகன கண்டம் பேரிடர் எனும்**
5. **எனும் துன்பம் பலவாற் கூடி**
**ஏழ்மை இயலாமை எனும் சோடை**
**ஞானமிலா மக்கள் அடைவர்**
ஞானிகளை வணங்கா வழி தெரியா
6. வழிதெரியா தவிப்பும் கூடியே
வளர்ச்சி இன்றி முடங்குவர்
அழிவெனும் பாதை தெரிந்தும்
அகலாது மதுமாது சூது என திளைப்பவர்
7. திளைப்பவர் தேற்றம் காண
தேசிகன் காட்டும் தெய்வநெறிஏற்க
பிழைப்பர் பின்னடைவு இன்றி
பிரணவ சூட்சும சக்தி கூடியே
8. கூடியே நல்ல பாதுகாப்பும்
குறைகள் விலகி பக்குவமும்
நாடியே ஞான முதிர்ச்சியும்
ஞான தேசிகன் தீட்சைபலத்தால்
9. பலத்தால் பரோபகாத்தன்மையும்
(மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமும்)
பசிபிணி விரட்டும் சித்தியும்
பலமான ஆயுள் கீர்த்தியும்
பாதுகாப்பான வாழ்வாதாரம் பெருகி

10. பெருகியே அரங்கன் தேடும்
பெருமை மிக்க ஞானவான்களாகி
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமையும் கண்டு சிறப்பர்

11. சிறப்பறிவு தந்தருளும் ஞானி
சிவராஜ யோகி அரங்கனை
மறுப்பின்றி ஏற்க இந்தஉலகம்
மாண்புமிக்க ஞான உலகமாகும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

கண்ணப்ப நாயனார் எச்சரிக்கை செய்தி

கண்ணப்ப நாயனார் நான் உலக மக்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்தி தருகிறேன். இதுநாள் வரையில் ஒருசிலர் உயிர் கொலை செய்தும், புலால் உணவினை உண்டும், மது அருந்தியும், நம்பி வந்த மனைவியை கைவிட்டுவிட்டு விலை மகளுடன் தொடர்பு கொண்டும், மற்றும் சூதாட்டத்தில் ஈடுபட்டும் வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு நோய் சூழ்ந்த உடம்பும், வறுமையும், இன்றும் பல துன்பங்களும் வரும் அதுமட்டுமல்லாது, கொடிய ஆயுதத்தாலும் இடி மின்னலாலும் வாகனவிபத்து போன்றவற்றாலும் துன்பங்கள் வரும்.

ஞானிகளை வணங்கும் மக்களுக்கு இதுபோன்ற துன்பங்கள் வராது. ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க வெளியீடான "**சித்தர்கள் போற்றி தொகுப்பு**" நூலை பயபக்தியுடன் படித்து வந்தால் துன்பங்களிலிருந்து விடுபடலாம்.

மேலும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தி எண்ணாயிரம் ரிஷிமார்களுக்கும், ஒன்பது கோடி ஞானிகளுக்கும், அட்டதிக்கு பாலகர்களுக்கும், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் எனும் மும்மூர்த்திகளுக்கும் மேலானவனும், அழைத்தால் அக்கணமே வந்து அருள் செய்யும் ஆற்றல் பொருந்திய முருகப்பெருமான் திருவடிகளை, ஒரு தீபம் ஏற்றி வைத்து "**ஓம் சரவண ஜோதியே நமோ நம**" என்றும் "**ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி**" என்றும் காலை மாலை சிறிது நேரமும், முடிந்தால் இரவு பனிரெண்டு மணிக்கும் வழிபட்டு வரவேண்டும். இந்த மகாமந்திரங்களை பாராயணம் செய்து வந்தாலே மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வாய்ப்பும் அன்னதானம் செய்ய வாய்ப்பும் கிடைக்கும். மேலும் வாழ்க்கையில் பாதுகாப்பும், ஞானத்திற்குரிய அறிவும் உண்டாகும். நீண்ட ஆயுளும் நோய்நொடி அற்ற வாழ்வும் கிடைக்கும். தினமும் பூஜை செய்து வருகின்ற மக்களுக்கு முருகப்பெருமான் தலைமையில் அமையபோகும் ஞானிகளின் ஆட்சியில் பங்குபெற வாய்ப்பும் கிடைக்கும்.

முருகப்பெருமானின் ஞான அவதாரமான ஓங்காரகுடிலாசானிடம் தீட்சை பெற்றுவரும் மக்களுக்கு முருகப்பெருமானின் பரிபூரண ஆசி கிடைக்கும். முருகப்பெருமானின் ஆசியால்தான் ஓங்காராக்குடிலாசான் தலைமை ஏற்று நடத்தி வரும் துறையூர் ஓங்காரக்குடிலில் இதுவரை ஆயிரக்கணக்கான ஏழை எளியவருக்கு இலவச திருமணங்களும், ஆயிரக்கணக்கான மக்களுக்கு இலவச கண் சிகிச்சை தந்து கண்ணொளி கொடுத்தும் மற்றும் கோடிக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் தொடர்ந்து வழங்கியும் வருகிறது. முருகப்பெருமான் ஆசியில்லாமல் இந்த அற்புத செயல்களை செய்ய இயலாது.

என்னையே வேலப்பன் கண்ணப்பன் என்றாரே!